**Crl. Misc.39**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**<u>CC 28 /2023</u>**

Deposition of Witness : PW8

| | | | |
|---|---|---|---|
| Name | **சுதா** | Taluk | |
| Husband Name | **பாஸ்கர்** | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 14.08.2024.** | | | |

( 1, 3, 4,5 எதிரிகள் ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுசப்படி மனு அனுமதிக்கப்பட்டது)

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனக்கு திருமணமாகி 15 ஆண்டுகள் ஆகிறது. எனக்கும், எனது கணவர் பாஸ்கருக்கும் காதல் திருமணம் என்றால் சரிதான். எனக்கு 2 மகன்கள் உள்ளனர். நான் அழகுகலை நிபுணராக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.7 நித்யா என்பவரை தெரியும். எனக்கு எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் 8 ஆண்டுகளாக தெரியும். எனக்கும், எனது கணவருக்கும் அடிக்கடி கருத்துவேறுபாடு ஏற்பட்டு நான் என் பெற்றோர் வீட்டிற்கு செல்வேன் என்றால் சரிதான். எனக்கும், என் கணவருக்கும் நடந்த பிரச்சனை சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும், பின்னர் சமாதானம் பேசப்பட்டு ஒன்றாக சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் சரிதான்.

2) 1 ம் எதிரி பாலசுப்ரமணியனை எனக்கு தெரியாது என்றால் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.4 புகைப்படத்தை நான் போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனக்கும், என் கணவருக்கும் சண்டை நடந்தபோது நான் எனது குழந்தைகளுடன் அ.சா.7 நித்யா வீட்டில் எவ்வளவு காலம் வசித்து வந்தேன் என்றால் 25 நாட்கள் வசித்தேன். அ.சா.ஆ 4 புகைப்படத்தில் உள்ளதுபோல் நான் 1 வது எதிரி

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு),
கரூர்.

பாலசுப்ரமணியனை திருமணம் செய்யவில்லை என்றால் சரிதான். நான், அ.சா.7 நித்யா வீட்டில் வசித்தபோது எனது போனை நித்யா பயன்படுத்தினார் என்றால் எனது கணவர் அடிக்கடி எனக்கு போன் செய்து தொல்லை கொடுத்ததால் போனை நித்யாவிடம் கொடுத்தேன்.

3) நான் பயன்படுத்திய போனில் எனது கணவருடன் கோவில் நிகழ்ச்சிகள் மற்றும் பிற நிகழ்ச்சிகளில் எடுத்த புகைப்படங்கள் உள்ளது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வரசொல்வதற்காகத்தான் போலிசார் என்னிடம் பேசினார்கள் என்றால் சரிதான். நான், அ.சா.7 நித்யாவின் கணவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும் நான் பார்த்ததில்லை. நான் பேசியதில்லை. நித்யாவுடன் பழக்கம் உள்ளவரையில் நித்யாவுக்கும், 1 வது எதிரி பாலசுப்ரமணியத்திற்கும் இடையே பிரச்சனை இருந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். அவர்களுக்குள் என்ன பிரச்சனை , என்ன உறவு என்று எனக்கு தெரியாது.

4) முதல் விசாரணையில் நான் 1ம் எதிரி பாலசுப்ரமணியத்திற்கு எதிராக சொல்லியுள்ள சாட்சியமானது போலிசார் கேட்டுகொண்டதற்கிணங்க சொன்னேன் என்றால் சரிதான். 3 முதல் 5 எதிரிகளை நான் பார்த்ததோ, பேசியதோ கிடையாது என்று சொன்னால் சரிதான்.

(3, 4, 5 எதிரிகள் தரப்பு, 1 ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணையை ஏற்றுகொள்கிறார்கள்).

மறு விசாரணை இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு),

கரூர்.